பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

08 01 2025 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கடல்சார் பொருளாதாரத்திற்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மாலத்தீவு பாதுகாப்பு அமைச்சர் திரு **Mohammed Ghassan Maumoon** –னுடனான பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமானதாக அமைந்ததாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

*3.* உணவுப்பொருள் பரிசோதனைக்காக புதிதாக 100 ஆய்வகங்கள் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. சுற்றுலாத்துறை வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது

**5.** மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மாளவிகா பன்சோட் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<<<>>>>>**

கடல்சார் பொருளாதாரத்திற்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
இன்று விசாகப்படடினத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.
ஆந்திராவின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று அவர் கூறினார்.
எதிர்கால தொழில்நுட்பத்தின் மையமாக ஆந்திரா உருவெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.
மக்கள் அளித்த ஆதரவு காரணமாக மத்தியில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்றுள்ளதாக பிரதமர் கூறினார்.
60 ஆண்டுகளுக்கு பிறகு இந்த சாதனை படைக்கப்பட்டிருப்பதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.
இந்த நிகழ்ச்சியில் பேசிய ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, உலகின் சிறந்த தலைவராக பிரதமர் திரு நரேந்திர மோடி திகழ்கிறார் என்று குறிப்பிட்டார்.
ஆந்திராவின் முக்கிய வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு சந்திரபாபு நாயுடு கூறினார்.

**<<<<<<>>>>>**

மாலத்தீவு பாதுகாப்பு அமைச்சர் திரு **Mohammed Ghassan Maumoon** –னுடனான பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமானதாக அமைந்ததாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
புதுதில்லியில், இன்று நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது, ராணுவ பயிற்சிகள், பாதுகாப்பு திட்டங்கள் உட்பட பல்வேறு பாதுகாப்பு ஒத்துழைப்பு அம்சங்கள் குறித்து தாம் விவாதித்ததாக அவர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.
இருநாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், மாலத்தீவு தேசிய பாதுகாப்புப்படையை விரிவாக்குவதற்கு தேவையான உதவிகளை வழங்குவது குறித்தும் இப்பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட்டதாக திரு ராஜநாத் சிங் கூறியுள்ளார்.

மாலத்தீவு நாட்டின் பாதுகாப்பு செயல்பாடுகளில் இந்தியா வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு **Mohammed Ghassan Maumoon** செய்தியாளர்களிடம் கூறினார்.
மேலும், மாலத்தீவு உடனான இந்தியாவின் உறவு வரலாற்று சிறப்புமிக்கது என்று அவர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

உணவுப்பொருள் பரிசோதனைக்காக புதிதாக 100 ஆய்வகங்கள் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டு வருவதாக மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு சிராக் பஸ்வான் தெரிவித்துள்ளார்.
உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் இந்திய உணவு திருவிழாவை இன்று அவர் தொடங்கிவைத்து பேசினார்.
பன்முக தன்மைமிக்க நம் நாட்டின் உணவு கலாச்சாரம், உலக அளவில் கவனம் பெறும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.
இந்திய உணவுப்பொருட்களின் பெருமையை சர்வதேச அளவில் எடுத்துச்சொல்லும் வகையில், இந்த விழா நடைபெறுவதாக அவர் கூறினார்.
சாதாரண மக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய திரு சிராக் பஸ்வான், உணவுத் திருவிழாவில் பரிமாறப்படும் உணவுகளின் தரத்தை உறுதிபடுத்த வேண்டும் என்று சம்பந்தப்பட்ட சமையல் கலைஞர்கள் மற்றும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

**<<<<<<>>>>>**

கேலோ இந்தியா, விளையாட்டுத்துறையில் இளையோர் சர்வதேச அங்கீகாரம் பெற வழிவகுப்பதாக மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா நிஹில் கட்சே தெரிவித்துள்ளார்.

ஒடிஷா மாநிலம் ஜெகத்பூரில் தேசிய விளையாட்டு ஆணைய மையத்தை அவர் இன்று பார்வையிட்டார்.

அப்போது தேசிய மற்றும் சர்வதேச அளவில் வெற்றிகளை குவித்த இளம் சாதனையாளர்களோடு அவர் உரையாடினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், விளையாட்டுத்துறையில் நாடு அளப்பரிய சாதனைகளை புரிந்து வருவதாக அவர் கூறினார்.

உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு கட்டமைப்பை வழங்குவதில் அரசு தொடர்ந்து முனைப்பு காட்டும் என்று திருமதி ரக்ஷா நிஹில் கட்சே உறுதியளித்தார்.

**<<<<<<>>>>>**

தேசத்தை ஒன்றிணைப்பதில் தேசிய மாணவர் படை வியக்கத்தக்க பணியை செய்துவருவதாக விமானப்படை தளபதி ஏர்ஷீப் மார்ஷல் அமர் பிரீத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற தேசிய மாணவர் படை குடியரசு தின பயிற்சி முகாமில் அவர் இன்று கலந்துகொண்டார்.

நாட்டை கட்டமைக்கும் வகையில் இப்படையில் இளையோருக்கு பயிற்சிகள் வழங்கப்படுவது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார்.

தன்னலமற்ற சேவை, தலைமைத்துவம், ஒழுக்கம் ஆகியவற்றை மாணவர்கள் பின்பற்ற தேசிய மாணவர் படை வழிகாட்டுவதாகவும், இதற்கு தேவையான உதவிகள் மற்றும் பயிற்சிகளை இந்திய விமானப்படை வழங்கும் என்றும் அமர் பிரீத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சுற்றுலாத்துறை வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று சுற்றுலாத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்ற அவர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகையில் தமிழகம் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது என்று கூறினார்.

மருத்துவ சுற்றுலாவை பொறுத்தவரை தேசிய அளவில் தமிழகம் முதலாவதாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

குறைந்த செலவில் அதிநவீன மருத்துவ சிகிச்சைகள் தமிழகத்தில் கிடைத்து வருவதாக திரு ராஜேந்திரன் கூறினார்.

<<<<<<>>>>>

அஸ்ஸாமில் வெள்ள பாதிப்புக்கு உள்ளான நிலக்கரி சுரங்கத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்புப்பணியின்போது ஒருவரது உடல் மீட்கப்பட்டுள்ளது.

**Dima Hasao** மாவட்டத்தின் உம்ரங்சோ சுரங்கத்தில், 15-க்கும்மேற்பட்ட தொழிலாளர்கள் சிக்கிய நிலையில், ராணுவம், கடற்படை, தேசிய பேரிடர் மீட்புப்படை, அஸ்ஸாம் மாநில பேரிடர் மீட்புப்படையினர் கூட்டாக இணைந்து கடந்த இரண்டு நாட்களாக மீட்புப்பணியில் ஈடுபட்ட நிலையில், ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மேலும், ஆழ்கடல் நீச்சல் வீரர்களின் உதவியோடு, தொடர்ந்து அங்கு மீட்புப்பணிகள் நடைபெற்றுவருவதாகவும் அவர் கூறுகிறார்.

<<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் நடைபெறவுள்ள மகா கும்பமேளாவின் சிறப்புகளை எடுத்துரைக்கும் வகையில், ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தயாரித்துள்ள சிறப்பு பாடலை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் புதுதில்லியில் இன்று வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், பிரசார்பாரதி தலைவர் திரு நவ்னீத்குமார் செஹல், பிரசார்பாரதி தலைமை செயல் அலுவலர் திரு கவ்ரவ் துவேதி, தூர்தர்ஷன் தலைமை இயக்குனர் திருமதி காஞ்சன் பிரசாத், ஆகாஷ்வாணி தலைமை இயக்குனர் டாகடர் பிரக்யா பாலிவால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

இந்தியா – ஐரோப்பியா யூனியன் இடையே மனித உரிமைகள் தொடர்பான பேச்சுவார்த்தை புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

வெளியுறவு அமைச்சக இணைச்செயலாளர் திரு பியூஷ் ஸ்ரீவத்சவா, இந்தியாவுக்கான ஐரோப்பிய யூனியன் தூதர் **'Herve Delphin,** தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில சர்வதேச அளவில் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு செயல்பாடுகளை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>

ஒரே நாடு – ஒரே தேர்தல் தொடர்பான மசோதாக்கள் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் விரிவான ஆலோசனை நடத்தப்படும் என்று அதற்கான நாடளுமன்ற கூட்டுக்குழு தெரிவித்துள்ளது. இன்று புதுதில்லியில் நடைபெற்ற அக்குழுவின் முதலாவது கூட்டத்தில், இந்த மசோதாக்கள் குறித்து சட்டத்துறை அதிகாரிகள் விரிவாக எடுத்துரைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய குழுவின் தலைவரும், பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு சௌத்ரி, சட்ட நிபுணர்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரிடமும் இதுகுறித்து ஆலோசிக்கப்படும் என்றார்.

**<<<<<<>>>>>**

அஸ்ஸாம் மாநிலம் **Darrang** பகுதியில் உள்ள மருத்துவமனை ஒன்றில், புதிதாக அமைய உள்ள நோயாளிகள் சிகிச்சை பிரிவுக்கு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் இப்பணிகள் மூலமாக, அப்பகுதி மக்கள் நவீன சிகிச்சைகளை எளிதாக பெற முடியும் என்று தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

மலேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மாளவிகா பன்சோட் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-15, 21-16 என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Goh Jin Wei** –ஐ வென்றார்.

-----------

தோஹாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 11-5, 11-7, 11-5 என்ற செட் கணக்கில், கத்தாரின் **Rawad Alnaser – Ahmed Korani** இணையை வென்றது.

---------------

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் பும்ரா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

பேட்டிங் பிரிவில் ரிஷப்பந்த் 9-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆல்ரவுண்டர் பிரிவில் ஜடேஜாவும் முதலிடத்தில் நீடிக்கிறார்.

**<<<<<<END>>>>>**